

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 25.03.2020

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்








# தமிழக நிகழ்வுகள்

- தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்கான மாணவ, மாணவியர் படை உருவாக்கப்படும் என்று பேரவையில் முதல்வர் எடப்பாடிகே. புழனிசாமி அறிவித்தார்.
    - **தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு 15 மற்றும் 25 ஆண்டுகள் பணி முடித்தவுடன் அடுத்தபதவிக்குதரம் உயர்த்தப்படும்**
    - திருச்சிமற்றும் கோயம்பத்தூர் மாவட்டங்களுக்கு 54 மீட்டர் கொண்ட இரண்டுவான் நோக்கி உயரும் ஊர்திகள் தலா ரூ.15 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும். தீயணைப்பு வீரர்களின் வீரவணக்க நினைவுச் சின்னம் தலைமையகத்தில் ரூ. 25 லட்சம் செலவில் அமைக்கப்படும். சின்னம் மற்றும் தொப்பிஅரசுசெலவில் வழக்கப்படும் என்றார்
    - **செய்திதுளிகள்:**
        - பணியாற்றும் போது உயிரிழப்பு ஏற்பட்டால் வழங்கப்படும் தொகை **ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.15 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.**
        - நிரந்திர ஊனமடைவோருக்கு ரூ.4 லட்சம் என்பது ரூ. 8 லட்சமாக உயர்த்திவழங்கப்படும்.
        - சாதாரணகாயங்கள் அடைவோருக்குரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும்

- **கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.3 கோடி வழங்க அன்பு மணிராமதாஸ் ஓப்புதல் அளித்துள்ளார்.**
    - **செய்திதுளிகள்:**
        - முதல் கட்டமாகரூ.3 கோடி ஓதுக்கி உள்ளதாகவும்,தேவைப ்பட்டால் கூடுதல் நிதி ஓதுக்கப்படும். மருத்துவர்களுக்கான பாதுகாப்பு கவசங்கள், கொரோனா சோதனை கருவிவாங்க நிதியை

பயன்படுத்தலாம் எனஅவர் தெரிவித்துள்ளார்.

## தேசிய நிகழ்வுகள்

- சீனாவில் யுன்னான் மாகாணத்தில் **'ஹன்டாவைரஸ்'எனப்படும் புதியவகைவைரஸ் பாதிப்பால் ஒருவர் உயிரிழந்தார்** இதுகுறித்து அந்த நாட்டிலிருந்து வெளியாகும் 'குளோபல் டைமஸ் நாளிதழ் தெரிவித்துள்ளதாவது.
    - கெரோனாவைரஸ் போல் ஹன்டாவைரஸ் காற்றில் பரவாதுஎனவும்,எ லியின் மூலம் பரவும் அந்தவைரஸ், பாதிக்கப்பட்டஎலியின் எச்சில்,கழிவுகள் மூலம் மட்டுமேபரவும் எனவும் கூறப்படுகிறது.
    - **செய்திதுளிகள்:**
        - பொதுவாக ஒரு மனிதரிடமிருந்து மற்றொரு மனிதருக்கு ஹன்டாவைரஸ் எளிதில் பரவாது என்பதால், அதுகரோனாவைரஸ் அளவுக்குபெரும் பாதிப்பை ஏற்படுத்தாது என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

- கெரோனா தொற்று தடுப்பு முன்னெச்சரிக்கையாக விடப்பட்டிருக்கும் நீண்ட விடுமுறையை டிஜிட்டல் கற்றல் மூலம் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருக்கும் முழுவதும் **கட்டணமில்லாத மத்திய அரசின் டிஜிட்டல் கற்றல் வலைதளங்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் மத்திய மனித வளமேம்பாட்டு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.**
    - இதில் பள்ளிகல்விக் கெனதிக்ஷா, இ-பாடசாலா, தேசியதிறந்த வெளிகல்வி போன்றவலைதளங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான செயலியை கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
    - **செய்திதுளிகள்:**
        - திக்ஷா: இதில் திக்ஷா வலைதளத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் பிளஸ்-2 வரையிலான

சி.பி.எஸ்.இ,என்.சி.இ.ஆர்.டி. மற்றும் மாநிலபாடத் திட்டங்களின் கீழ் உள்ள 80,000-க்கும் அதிகமானபாட புத்தகங்களும் டிஜிட்டல் வடிவில் இடம்பெற்றிருக்கின்றன.

- இ-பாடசலா: என்.சி.இ.ஆர்.டி. உருவாக்கியுள்ள இ-பாடசாலா வலைதளத்தில் ஒன்றாம் வகுப்புமுதல் பிளஸ்-2 வரையிலான அனைத்து பாடங்களுக்கும் 1,886 ஆடியோ வடிவிலானபாடங்கள், 2,000 விடியோவடிவிலானபாடங்கள் மட்டுமின்றி 696 இ-புத்தங்களும் பல்வேறுமொழிகளில் இடம்பெற்றுள்ளன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- கெரோனாவைரஸ் பாதிப்புஎதிரொலியாகடோக்கியோஒலிம்பிக் போட்டிகள் ஓராண்டுக்கு ஒத்திவைக்கப்படுவதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி, ஜப்பான் போட்டிஅமைப்புக் குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன
  - வரும் **ஜூலை 24 முதல் ஆகஸ்ட் 9-ஆம் தேதிவரை டோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுவதாக இருந்தது. இதற்காக பல்லாயிரக்கணக்கான கோடி செலவில் புதிய விளையாட்டு மைதானங்கள் அமைத்து ஏற்பாடுகளை தீவிரமாக செய்துள்ளது ஜப்பான் அரசு...**
  - **செய்திதுளிகள்**
    - போட்டிகளை நடத்துவதற்காக ஜப்பான் மொத்தம் ரூ.95 ஆயிரம் கோடியை செலவிட்டுள்ளது.
    - இந்நிலையில் 2021ஆம் ஆண்டுக்குபோட்டிகள் ஒத்திவைக்கப்பட்டதால். ரூ.45 ஆயிரம் கோடிஅளவுக்கு நஷ்டம் ஏற்படும் எனகணக்கிடப்பட்டுள்ளது..

## திருக்குறள்

**குறள் எண் :** 147

**குறள் எண் :** 148

**குறள் பால் :**அறத்துப்பால்

**குறள் இயல் :** இல்லறவியல்

**குறள் அதிகாரம் :**பிறனில் விழையாமை

**குறள்:**

**“பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற வொழுக்கு”**

**விளக்கம் :**

பிறன் மனைவியை ஆசையோடு பார்க்காத பெருங்குணம்
அறிவுடையோர்க்கு நிரம்பிய ஒழுக்கமுமாகும்

We Shine Academy™